விடை குறிப்பு

## ஆண்டுப் பொதுத் தேர்வு - மே - 2022 ( TENTATIVE )

### 11 - ஆம் வகுப்பு - வணிகவியல்

| A TYPE | | | B TYPE | | |
|---|---|---|---|---|---|
| 1 | இ | தனியாள் வணிகம் | 1 | இ | சுற்றாடும் வியாபாரிகள் |
| 2 | ஈ | உரிமையாளர்கள் | 2 | அ | நிறும செயல்முறை விதிகளின் மாதிரி |
| 3 | அ | 3 | 3 | ஆ | பிணையக் காப்பு பண்டகக் காப்பகங்கள் |
| 4 | இ | உற்பத்தித் தொழில் | 4 | ஆ | பன்னாட்டு வியாபாரம் |
| 5 | ஈ | சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு | 5 | ஈ | இரண்டு |
| 6 | இ | சம்பளம் / கூலி | 6 | ஆ | ஒப்பந்தத்தால் |
| 7 | ஈ | 1872 | 7 | ஈ | சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு |
| 8 | ஆ | ராபர்ட் ஓவென் | 8 | இ | மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையேயான வணிகம் ( W2R ) |
| 9 | ஈ | அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது | 9 | ஈ | முழுவதும் வரி விலக்கிற்கு உட்பட்டது |
| 10 | அ | நிறும செயல்முறை விதிகளின் மாதிரி | 10 | ஈ | கூட்டுறவு |
| 11 | ஈ | இரண்டு | 11 | அ | Goods and Services Tax |
| 12 | ஆ | பன்னாட்டு வியாபாரம் | 12 | ஈ | அத்தியாவசியப் பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது |
| 13 | ஈ | கூட்டுறவு | 13 | இ | உற்பத்தித் தொழில் |
| 14 | ஈ | முழுவதும் வரி விலக்கிற்கு உட்பட்டது | 14 | ஈ | 1872 |
| 15 | இ | சுற்றாடும் வியாபாரிகள் | 15 | அ | 3 |
| 16 | இ | மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையேயான வணிகம் ( W2R ) | 16 | ஆ | ராபர்ட் ஓவென் |
| 17 | ஈ | பண்டகசாலை | 17 | இ | தனியாள் வணிகம் |
| 18 | ஆ | பிணையக் காப்பு பண்டகக் காப்பகங்கள் | 18 | ஈ | உரிமையாளர்கள் |
| 19 | அ | Goods and Services Tax | 19 | ஈ | பண்டகசாலை |
| 20 | ஆ | ஒப்பந்தத்தால் | 20 | இ | சம்பளம் / கூலி |

B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.

**21. பண்டமாற்று முறை என்றால் என்ன?**

- ஒரு பொருள், மற்றொரு பொருளுக்கு மாற்றாகப் பரிமாற்றம் செய்யப்படும் முறையைப் பண்டமாற்று முறை எனலாம்.

(அல்லது)

- பணப் பரிமாற்றம் இடம் பெறாமல், ஒரு பொருளைக் கொடுத்து வேறு பொருளைப் பெறும் வணிக முறையே பண்டமாற்று வணிக முறையாகும்.

**22. கூட்டாளி என்பவர் யார்?**

- பல நபர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டாண்மையை ஏற்படுத்தினால் அவர்கள் கூட்டாளிகள் என்று அழைக்கப்படுகின்றார்.

( அல்லது )

- கூட்டாண்மையில் ஈடுபடும் ஒவ்வொரு உறுப்பினரும் கூட்டாளி ஆவார்.

**23. துறைவாரி அமைப்புகளுக்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுக.**

1. இந்தியன் இரயில்வே துறை
2. தபால் தந்தி துறை
3. அகில இந்திய வானொலி
4. தூர்தஷன்
5. உணவு மற்றும் பொது விநியோக துறை
6. தமிழ்நாடு காவல் துறை

**24. ATM பற்றி நீவீர் அறிவது யாது?**

- தானியங்கி பணம் வழங்கும் அட்டையைப் பயன்படுத்தி இந்தியாவில் எங்கிருந்தும் எந்தவொரு நேரத்திலும் பணத்தை எடுக்க முடியும்.
- இந்தியாவின் எந்தப் பகுதியிலும், பொருள்களை வாங்கவோ அல்லது சேவைகளைப் பெறவோ அதிக அளவில் இந்த அட்டை பயன்படுகிறது.
- பிறவங்கிகளின் ATM இயந்திரத்தில் அட்டையைவைத்துப் பணம் எடுப்பது எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பயன்பாடுகளுக்கு பிறகு கட்டணம் விதிக்கப்படுகிறது.
- பணவைப்பு இயந்திர வசதி, பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் எப்போது வேண்டுமானாலும் கணக்கில் பணத்தை வைப்பு செய்வதற்குப் பயனுள்ளதாக இருக்கின்றன.

**25. பண்டக் காப்பகங்களின் பணிகளை பட்டியலிடுக.**

1) பொருட்களை பாதுக்காத்தல்
2) விலைகளை நிலைப்படுத்தல்
3) தேவை மற்றும் வழங்கலையும் சமன்படுத்துதல்
4) வியாபார நிதி பெற உதவுதல்
5) இடர்களை ஏற்றல்
6) விற்பனைக்கு முன்னேற்பாடு
7) சந்தை எல்லையை விரிவுபடுத்துதல்
8) மதிப்பு கூட்டப்பட்ட சேவைகள்

B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Padasalai.Net

26. அஞ்சலக சேமிப்பு திட்டங்கள் ஏதேனும் நான்கினை எழுதுக.

1) அஞ்சலக சேமிப்பு கணக்கு
2) அஞ்சலக தொடர் வைப்புக் கணக்கு
3) அஞ்சலக நிலைவைப்பு கணக்கு
4) அஞ்சலக மாதாந்திர வருவாய் கணக்கு திட்டம்
5) மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம்
6) பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு
7) தேசியச்சேமிப்பு பத்திரங்கள்
8) கிசான் விகாஸ் பத்திரங்கள்
9) சுகன்யா சம்ரித்தி கணக்கு

27. மறு ஏற்றுமதி என்பதன் பொருள் யாது?

❖ ஒரு நாட்டில் இருந்து, பொருட்களை இறக்குமதி செய்து, அவற்றை வேறுநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

28. வியாபாரத்தின் பொருள் தருக.

❖ இலாபம் ஈட்டும் நோக்கில், பொருட்களையும் சேவைகளையும் வாங்கி விற்பது மற்றும் பரிமாற்றம் செய்வது வியாபாரம் ஆகும்.

( அல்லது )

❖ பொருட்களையும் சேவைகளையும் தேவையுடையவர்கள் மற்றும் அதற்கான தொகையை செலுத்த தயாராக உள்ளவர்களுக்கு, அப்பொருட்களையும் சேவைகளையும் கொண்டு சேர்ப்பது வியாபாரம் ஆகும்.

29. மறைமுக வரி என்பதன் பொருள் என்ன? ஏதேனும் இரண்டு உதாரணங்கள் தருக.

❖ சரக்கு மற்றும் சேவைகளை வழங்கும் விற்பனையாளர் மீது, வரி விதிக்கப்பட்டு, அவற்றை வாங்குபவரால் செலுத்தப்படும் வரியே மறைமுக வரி ஆகும்.

❖ <u>உதாரணங்கள்</u>

1) சுங்கவரி
2) சரக்கு மற்றும் சேவை வரி
3) மதிப்புக் கூட்டு வரி

30.

அ) இந்து கூட்டு குடும்பம்

ஆ) குடும்பங்கள் ஒன்று சேர்ந்து ஒன்றாகவே வாழ்ந்து அக்குடும்பத்தின் சொத்துக்களை ஒன்றாக முதலீடு செய்து தொழிலை மேற்கொண்டு, அதிலிருந்து கிடைக்கின்ற இலாப நட்டத்தைப் பகிர்ந்து கொண்டு வாழும் இந்தக் குடும்பமே இந்து கூட்டுக் குடும்பம் என்று அழைக்கப்படுகின்றது.

B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613



<u>பகுதி - III</u>

<u>எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.</u> $7 \times 3 = 21$

31. சேவைத் தொழில்கள் என்றால் என்ன? அதன் வகைகளை விவரி

❖ இயல் பொருட்களை உற்பத்தி செய்யாமல், சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்பனை செய்பவை, சேவைத் தொழில்கள் எனப்படுகின்றன.

❖ இவ்வகை சேவை வியாபாரம் பலவகையான தொழிலுக்கு உதவி புரிகின்றன.

<u>வகைகள்</u>

1) தனிச் சேவை 2) பொதுச் சேவை 3) விநியோகச் சேவை 4) நிதிச் சேவை

5) தனித்துவச் சேவைகள் 6) தனித்திறன் சேவை

32. அயல் நாட்டு நிறுமங்கள் பற்றி எழுதுக.

❖ இந்தியாவிற்கு வெளியே வேறு நாடுகளில் பதிவு செய்யப்பட்டு, இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல் நாட்டு நிறுமம் எனப்படும்.

33. பொது கழகங்கள் என்றால் என்ன?

❖ பொதுகழகம் என்பது, பாராளமன்றமோ சட்டமன்றமோ இயற்றும் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு தன்னாட்சியுரிமை பெற்ற நிறுவனமாகும்.

34. சுய உதவி குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பியல்புகளை விளக்குக.

1) "முதலில் சேமிப்பு. பிறகு கடன்" என்பது ஒவ்வொரு குழு உறுப்பினரின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.
2) சுய உதவிக்குழு ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்களை, உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
3) சுய உதவிக்குழு என்பது 10 முதல் 20 உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
4) குழுக்களைப் பதிவு செய்யவேண்டிய அவசியம் இல்லை.
5) அரசியல் சார்பு இல்லாத, தாமாகவே சேர்ந்து உருவாக்கிய ஜனநாயகக் கலாச்சாரத்தைக் கொண்டது இந்தக் குழுக்கள்.
6) ஒவ்வொரு குழுவிலும், ஒரு குடும்பத்திலிருந்து ஒரு நபர் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும்.
7) ஆண்கள் மட்டுமோ, அல்லது பெண்கள் மட்டுமோ உறுப்பினர்களாக இருக்கும் வகையில் குழு அமைக்கப்பட வேண்டும்.
8) சுய உதவிக்குழு கூட்டமானது, ஓய்வு நேரங்களில் மட்டும் வாரம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும். அதிகப் பங்களிப்பிற்கு அனைவரும் வருகை தருதல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.
9) ஒவ்வொரு குழுவும், தன் உறுப்பினர்கள் தங்களின் கருத்துகளைப் பரிமாறிக்கொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கிறது.
10) குழுக்கள் தங்களுக்குள் வெளிப்படைத் தன்மையுடன் செயல்பட வேண்டும். நிதி பரிமாற்ற நடவடிக்கைகளில் அவை கூட்டுப்பொறுப்பு ஏற்கவேண்டும்.

B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

35. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுது.

1. மொத்த வியாபாரிகள், உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
2. இவர்கள், பொருட்களை மொத்தமாக வாங்கி, சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
3. இவர்கள், ஒரு குறிப்பட்ட பொருளின், பல்வேறு வகைகளை விற்பனை செய்கின்றனர்.
4. இவ்வகை வியாபாரத்திற்குப் பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது.
5. பொருட்களை விநியோகம் செய்ய, முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.
6. சில்லறைவியாபாரிகளுக்கு, இவர்கள் கடனுதவி அளிக்கின்றனர்.
7. உற்பத்தியாளர்களுக்கும், இவர்கள் நிதியுதவி செய்து தருகின்றனர்.
8. நகரங்கள் பெருநகரங்களில் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் இவர்கள் செயல்படுவதைக் காணலாம்.

36. மடங்கு கடைகளின் குறைபாடுகளை விளக்குக.

1) ஒரு சில பொருள்கள் மட்டும் விற்பனை
   - மடங்குக் கடையில் குறிப்பிட்ட சில வகைப் பொருட்களை மட்டும் விற்பனை செய்வதால், வாடிக்கையாளர்கள் அவற்றை மட்டுமே வாங்க முடியும்.
2) வசதிகள் இல்லாமை
   - இக்கடைகளில் வாடிக்கையாளர் எதிர்பார்க்கும் கடன்விற்பனை, வீட்டு விநியோகம், ஓய்வறை, விளையாடுமிடங்கள் போன்ற வசதிகள் கிடைப்பதில்லை.
3) நேரடித் தொடர்பின்மை
   - உரிமையாளர் வாடிக்கையாளர்களிடம் நேரடித் தொடர்பு கொள்ளவாய்ப்பில்லை. ஊழியர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளரிடமும் ஊக்கத்துடன் பணியாற்ற வாய்ப்பில்லை.

37. ஒப்பந்தத்தை மீறுகையினால் பாதிக்கப்பட்ட நபருக்கு கிடைக்கக்கூடிய ஐந்து வகையான தீர்வுகளை எழுதுக.

1) ஒப்பந்தத்தை ரத்து செய்தல்
2) திட்டவட்டமான நிறைவேற்றத்திற்கான வழக்கு
3) தடையுத்தரவிற்கான வழக்கு
4) பணிக்கு ஏற்ற தொகைக்கான வழக்கு
5) ஏற்பட்ட நட்டத்திற்கான இழப்பீடு

38. ஐவகை வருமானத் தலைப்புகளை அதன் பிரிவுகளுடன் குறிப்பிடுக.

1) சம்பளங்களிலிருந்து வருமானம் (பிரிவு 15 - 17)
2) வீட்டுச் சொத்திலிருந்து வருமானம் (பிரிவு அத்தியாயம் ( 25 - 27 )
3) வாணிகம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலில் இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் (பிரிவு 28 - 44)
4) மூலதன ஆதாயங்கள் ( பிரிவு 45 - 55 )
5) ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம் (பிரிவு 56 - 59 )

B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

39. சிறு குறிப்பு வரைக : சிறப்புத் தொழில்

- அந்தந்த துறையால் , அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட, உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் சிறப்புத் தொழில்கள் ஆகும்.

  ( எ.கா ) வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணிகள்.

40. காப்பீட்டின் கோட்பாடுகளைப் பட்டியலிடுக. அவற்றில் ஏதேனும் ஒன்றினைப் பற்றி விவரிக்கவும்.

காப்பீட்டின் கோட்பாடுகள்

1) மிக்க நம்பிக்கை 2) காப்பீடு பெறுநலன் 3) ஈட்டுறுதி 4) அண்மைக் காரணம்

5) பகிர்ந்தளித்தல் 6) பகர உரிமை 7) இழப்பை மட்டுப்படுத்துதல்

1) மிக்க நம்பிக்கை
   - இக்கோட்பாட்டின்படி, காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.
   - காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும்,
   - காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்துவிட வேண்டும்.
2) காப்பீடு பெறுநலன்
   - காப்பீடு பெறுநலன் என்பது, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, நிதி சார்ந்த அக்கறை இருத்தலைக் குறிக்கிறது.
   - காப்பீடு பெறுநருக்கு, காப்பீடு செய்யப்படும் கருப்பொருள் மீது, காப்பீடு பெறுநலன் இருக்கவேண்டும்.
3) ஈட்டுறுதி
   - ஒருவருக்கு ஏற்பட்ட உண்மையான நட்டத்தை ஈடு செய்வதே ஈட்டுறுதியாகும்.
   - காப்பீடு பெறுநருக்கு, உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டதோ, அந்த இழப்புக்கு ஈடான தொகை மட்டுமே இழப்பீடாக அளிக்கவேண்டும்.
   - இழப்பைவிட கூடுதலான தொகை வழங்கப்படாது.
4) அண்மைக் காரணம்
   - ஒரு இழப்பு ஏற்பட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காரணங்கள் இருப்பின், அதற்குரிய அண்மைக் காரணம் எதுவென காணவேண்டியதைப் பற்றி குறிப்பிடுவது இக்கோட்பாடு ஆகும்.
5) பகிர்ந்தளித்தல்
   - ஒரே கருப்பொருள், ஒன்றுக்கு மேற்பட்ட காப்பீட்டு நிறுவனங்களிடம் காப்பீடு செய்யப்பட்டிருப்பின் அதற்கு “இரட்டைகாப்பீடு என்று பெயர்.
   - காப்பீடு பெறுநருக்கு ஏற்படும் இழப்பினை, சம்பந்தப்பட்ட காப்பீட்டு நிறுவனங்கள், அவரவர் செய்திருக்கின்ற காப்பீட்டு ஒப்பந்த தொகைக்கு ஏற்ப விகிதாச்சார அடிப்படையில் அவரவர்களுக்குள்ள பங்கினை பகிர்ந்து அளித்தல் வேண்டும்.
6) பகர உரிமை
   - பகர உரிமை என்பது, ஒருவருக்கு ஏற்பட்ட இழப்பை, காப்பீடு தருநர் ஈடு செய்தபின், காப்பீடு பெறுநர் தனக்குள்ள உரிமைகளை காப்பீடு தருநருக்கு மாற்றிக் கொடுப்பது ஆகும்.

B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Padasalai.Net

- காப்பீடு பெறுநர், தனக்கு ஏற்பட்ட உண்மையான இழப்பைக் காட்டிலும், கூடுதலாக ஆதாயம் அடைந்து விடக் கூடாது.
- அப்படி இலாபம் அடைந்தால், அது ஈட்டுறுதிக் கோட்பாட்டுக்கு எதிராக அமைந்து விடும்.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. அ) **தொழில், சிறப்புத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு - ஓர் ஒப்பீடு செய்க**

| அடிப்படை | தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|---|
| 1. பணியின் தன்மை | சரக்கு மற்றும் சேவையை பொதுமக்களுக்கு அளித்தல் | சிறப்பு தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல் | பணியாளர்களுக்கு வழங்கிய செயலை செய்தல் |
| 2. தகுதி | குறைந்தபட்ச தகுதி என்று ஏதும் இல்லை. | குறிப்பிட்ட பிரிவில் சிறப்புத் தகுதியும் / பயிற்சியும் பெறுதல். | குறைந்தபட்ச தகுதி தேவை இல்லை |
| 3. மூலதனம் | நிறுவனத்தின் அளவைப் பொறுத்து மூலதன அளவு மாறும் | இதை உருவாக்க வரையறுக்கப்பட்ட நிதி தேவைப்படும் | மூலதனம் ஏதும் தேவையில்லை |
| 4. வெகுமதி | இலாபம் | தொழில்முறை கட்டணம் | கூலி / சம்பளம் |
| 5. இடர் | இலாபம், நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும் நிலையானது | நிலையான கூலி / சம்பளம் இடர் ஏதும் இல்லை |
| 6. உரிமை மாற்றம் | உரிமை மாற்றம் செய்யப்படும் | உரிமை மாற்றம் செய்ய இயலாது | உரிமை மாற்றம் செய்ய முடியாது |

( அல்லது )

41 ஆ) **ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகளை விளக்குக.**

1) <u>பொது வருங்கால வைப்பு நிதி</u> :

- இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில், இது மிகப் பாதுகாப்பான நீண்டகால முதலீட்டு வாய்ப்பாகும்.
- இதற்கு முழுமையான வருமானவரி விலக்கு உண்டு.
- இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம்.
- இதில் செலுத்தப்படும் தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் திரும்பப் பெறமுடியாது.





- முதிர்வு தேதிக்கு முன்பாக முதலீட்டாளருக்கு நிதி நெருக்கடி அல்லது நிதித் தேவை ஏற்பட்டால், இந்தக் கணக்கிலிருந்து கடன்பெற்று நிதிக் நெருக்கடியை சமாளித்துக் கொள்ளவாய்ப்பு உள்ளது.

2) <u>பரஸ்பர நிதிகள்</u>

- பரஸ்பர நிதி என்பது, நிதிநிறுமங்கள் பொதுமக்களிடமிருந்து, பல்வேறு பரஸ்பர நிதித் திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை, பங்குச்சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும்.
- இதன்மூலம் சாதாரண மக்கள் மறைமுகமாக பங்குச்சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.
- பரஸ்பர நிதி நிறுவனங்கள் சிறு முதலீட்டார்கள் தேவைக்கு ஏற்ப, பலதரப்பட்ட திட்டங்களை வைத்துள்ளன.

3) <u>நேரடி சம உரிமை பங்குகள் (அல்லது) பங்கு கொள்முதல்</u>

- தனிநபர், பங்குகளில் முதலீடு செய்யும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு செய்யும் முன்பாகப் பங்கு மாற்றகங்கள் வாயிலாக விற்கப்படும் பங்குகளைக் குறித்துச் சில செய்திகளை ஆராய்ந்து அறிதல் மிக அவசியம்.

4) <u>அசையாச் சொத்தில் முதலீடு செய்தல்</u>

- அசையாச் சொத்தில் முதலீடு செய்தல் என்பது இந்தியாவில் வேகமாக வளர்ச்சி பெற்று வரும் முதலீட்டு துறையாகும்.
- ஒரு வீட்டு மனை அல்லது அடுக்குமாடி குடியிருப்பு வாங்குவது என்பது, மிகச் சிறந்த தனி மனித முதலீட்டு முறைகளில் ஒன்றாக விளங்குகிறது.

5) <u>விலையுயர்ந்த உலோகங்களில் முதலீடு செய்தல்</u>

- தங்கம், வெள்ளி, பிளாட்டினம் போன்ற உலோகங்களில் முதலீடு செய்வது என்பது, மிகப்பழமையான மற்றும் எக்காலத்திற்கும் ஏற்ற முதலீட்டு வழிகளில் ஒன்றாகும்.
- சந்தை நிலைக்கேற்றாற் போல், உலோகங்களின் மதிப்பு மெதுவாக ஆனால் உறுதியாக அதிகரித்துக்கொண்டு இருக்கிறது. இவ்வகை முதலீட்டில், முதலீட்டாளர்கள் எந்தவித நட்டமும் இல்லாமல் அவற்றை உடனடியாக பணமாக மாற்றிக் கொள்ள இயலும்.

6) <u>அஞ்சலகச் சேமிப்பு திட்டங்கள்</u>

- அஞ்சலகத்தில் வெவ்வேறு விதமான சிறுசேமிப்பு திட்டங்கள் உள்ளன.
- அவை 1. அஞ்சலக சேமிப்பு கணக்கு

2. அஞ்சலக தொடர் வைப்புக்
3. அஞ்சலக நிலைவைப்பு கணக்கு
4. அஞ்சலக மாதாந்திர வருவாய்கணக்கு திட்டம்
5. மூத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம்
6. பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு
7. தேசியச் சேமிப்பு பத்திரங்கள் ஆகியவை ஆகும்.

- அஞ்சல் துறையில் உள்ள மேற்கண்ட திட்டங்களில் தங்கள் தேவைகளுக்கேற்ப முதலீட்டார்கள் முதலீடு செய்து பயன் பெறலாம்.

7) <u>பொது வைப்புகள்</u>

- வங்கிகளில் நிலைவைப்பு நிதியில் பணம் செலுத்துவதைவிட, பொது வைப்புகள் அதிக இலாபகரமானவை.
- இதில் முதலீட்டாளர், முதலீட்டு கால அளவை மிகக் கவனமாகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.
- முதலீட்டாளர் அந்த முதலீட்டு தொகையை, முதிர்வு காலத்திற்கு முன்பாக திரும்ப எடுக்க முடியாது.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

- நீண்டகாலத்திற்கு முதலீடு செய்யவிரும்பும் முதலீட்டாளர்கள் பொது வைப்பினைத் தேர்ந்தெடுக்கலாம்.

8) நிறும முறிகள் அல்லது கடன் பத்திரங்கள் (Bonds)

- தாங்கள் சிரமப்பட்டுச் சம்பாதித்த பணத்தைப் பாதுகாப்பாக முதலீடு செய்யவிரும்பும் முதலீட்டாளர்களுக்கு நிறும முறிகள்(பத்திரங்கள்) சீரிய முதலீட்டு வாய்ப்புகளில் ஒன்றாகும்.

9) காப்பீட்டு திட்டங்களுடன் இணைந்த பரஸ்பர நிதி (Unit Linked Insurance Plans)

- ULIP என்பது, ஆயுள் காப்பீடு இணைந்த ஒரு பரஸ்பர நிதி முதலீடு ஆகும்.
- இது காப்பீடு செய்பவருக்கு, இழப்பை ஈடுசெய்வதோடு பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களில், பரஸ்பர நிதி இணைந்த திட்டம் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பைஅளிக்கிறது.

42. அ) தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.

1. தனிநபர் உரிமை
   - இது தனி நபரால் நடத்தக்கூடிய அமைப்பாகும்.
   - அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார்.
   - வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.
2. தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு
   - இவர் தனது அறிவுத்திறன் மற்றும் பட்டறிவின் மூலம் யாருடைய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார்.
   - இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.
3. வரையறாப் பொறுப்பு
   - தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
   - அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்தவேண்டும்.
4. முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை
   - நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால், அவரைமேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது.
   - இலாபத்தின் உந்துதலால், அவர் தனது வணிகத்தை மேலும் விரிவாக்கம் செய்கிறார்.
5. அரசு விதிமுறைகள் பின்பற்றாமை
   - இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்படவேண்டிய கட்டாயம் இல்லை.
6. குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை
   - தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால், முதல் சிறிய அளவிலேயேஇருக்கும்.
   - அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம்.
   - மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.
7. தனி நிறுவனங்களின் நீடித்த வாழ்வு
   - தனியாள் வணிகத்திற்கு நீடித்தவாழ்வு என்பது தனியாள் வணிக உரிமையாளரின் இறப்பு அல்லது வியாபாரம் செய்யும் திறனை இழத்தல் போன்றவைகளைப் பொறுத்ததாகும்.
   - இவையே அவருடைய வணிகத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வரலாம்.





( அல்லது )

42. ஆ) சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பந்தம் ஒன்றின் இன்றியமையாத கூறுகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.

1. முனைவும் ஏற்பும்
   - ஒரு ஒப்பந்தத்திற்கு இரண்டு நபர்கள் தேவை.
   - அவர்களில் ஒரு நபர் முனைவும் மற்றொருவர் ஏற்பும் செய்கின்றனர்.
2. சட்ட உறவு முறை
   - ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உள்நோக்கம், தங்களுக்கிடையே ஓர் சட்ட உறவுமுறை உருவாக்குவதற்காக இருக்க வேண்டும்.
   - சமூக தன்மையுடைய உடன்படிக்கைகளில் , சட்ட உறவுமுறை இல்லை என்றால் ஒப்பந்தங்களாக முடியாது.
3. சட்டபூர்வமான மறுபயன் ( பிரிவு 2d )
   - மறுபயன் என்பது, எதையேனும் திரும்பப்பெறுதல் ஆகும்.
   - மறு பயன் இல்லாத உடன்படிக்கை, செல்லாத உடன்படிக்கையாகும்
4. சட்டபூர்வமான நோக்கம் ( பிரிவு 23 )
   - உடன்பாட்டின் நோக்கம், சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும்.
   - இதன் நோக்கம், சட்டத்துக்கு புறம்பானதாகவோ அல்லது ஒழுக்கக் கேடானதாகவோ அல்லது பொது நலனுக்கு எதிராகவோ இருக்கக்கூடாது.
5. தன்னிச்சையான இசைவு ( பிரிவு 13 மற்றும் 14 )
   - உடன்படிக்கை, நபர்களின் தன்னிச்சையான இசைவால் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.
   - ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்கள் இசைவு தர வேண்டும்.
   - அவர்கள் ஒரு விஷயத்தை ஒரே நேரத்தில், ஒரே நோக்குடன் உடன்பட வேண்டும். அதாவது, ஒருமித்த கருத்து இருக்க வேண்டும்.
6. ஒப்பந்த தகுதி ( பிரிவு 11 )
   - ஒப்பந்தத்தில் ஈடுபடத் தேவையான தகுதி உடைய நபர்களால், மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தம் ஆகிறது.

ஒப்பந்தத்தில் ஈடுபடுவார்கள்

1 சட்டப்படி உரிமை வயது அடைந்தவர்
2 மனச்சமநிலை உடையவர்
3 சட்டத்தினால் தகுதியற்றவர் என அறிவிக்கப் படாத நபர்கள்.

7. தெளிவுடைமை (பிரிவு 29)
   - ஒரு ஒப்பந்தம் செல்லத் தகுந்ததாக இருக்கவேண்டும் எனில் அதன் நிபந்தனைகள் தெளிவாக இருக்க வேண்டும்.
8. நிறைவேற்றும் தன்மை (பிரிவு 56)
   - செய்து கொள்ளும் உடன்பாடு நிறைவேற்றப்படக் கூடியதாக இருத்தல் வேண்டும். செயல்படுத்த முடியாத ஒன்றை செய்வதாக மேற்கொள்ளும் உடன்பாடு செல்லாத ஒன்றாகும்.
9. சட்டத்தால் செயல்படுத்தும் திறன்
   - சட்டத்தால் செயல்படுத்தும் திறன் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
   - சட்டத்தால் சில உடன்படிக்கைகள், சட்ட விரோதமானது அல்லது செல்லாது என வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது.



Padasalai.Net

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

43. அ) துறைவாரி நிறுவனங்களின் ஏதேனும் மூன்று நிறைகள் மற்றும் மூன்று குறைகளை விளக்குக.

**நிறைகள்**

1) **எளிமையான அமைப்பு**
- இதனை அமைப்பது எளிது.
- இவ்வமைப்புகளை நிர்வாக முடிவு எடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்.

2) **பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு**
- இதனை, பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும்.
- அத்துறை அமைச்சரே இதற்கு பொறுப்பாவார்.

3) **இரகசியம் காத்தல்**
- பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவை அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில் தான் இருக்கவேண்டும்.
- அப்போதுதான் அத்துறைகளில் பணியாளர்கள், தங்களது பணிகள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க முடியும்.

4) **பொது மக்களுக்கு வரிச்சுமை குறைவு**
- இத்தொழில் நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால், பொதுமக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்

5) **சமூக மாற்றத்திற்கான கருவி**
- அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக நீதியை, அரசுத்துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும்.
- ஆகவே, அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த, துறை நிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன.

6) **பொது மக்களின் நிதியை தவறாக பயன்படுத்துதலினால் ஏற்படும் இடர் குறைவு**
- துறைவாரி நிறுவனங்களின் வரவு செலவு திட்டம் கணக்கு மற்றும் தணிக்கை செயல்முறைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும்.
- இதனால் பொதுமக்களின் நிதியைத் தவறாகப் பயன்படுத்துவதினால் ஏற்படும் இடர்பாடு குறைகிறது.

7) **அமைச்சகத்தின் விதிகள் மற்றும் செயல்பாடுகள் முறையாக பின்பற்றப்படும்**
- அமைச்சகத்தின் நேரடிக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையின் மூலமே துறைவாரி நிறுவனங்கள் இயங்குகிறது.
- பொதுமக்களின் நலனுக்குப் பாதிப்பு இல்லாமல் அத்துறை அமைச்சகம் விதிகளையும் செயல்முறைகளையும் வகுக்கிறது.

**குறைகள்**

1) **தாமதமும், சிகப்பு நாடா போக்கும்**
- அரசின் நெகிழ்வற்ற நடைமுறைகளையும் மரபுகளையும் வழுவாது பின்பற்றுவதும் காலதாமதமும் மிகப்பெரிய குறைபாடாகும்.
- வணிக நிறுவனங்கள் காலதாமத முடிவெடுப்பது ஏற்கத்தக்கது அல்ல.

2) **கூடுதல் வரிச்சுமை**
- துறைவாரி நிறுவனங்களில் ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட அரசின் கருவூலத்திலிருந்து தொகையை வழஙகவேண்டியுள்ளது.
- இதைால் பொதுமக்கள மீது மேலும் வரினயச் சுமத்தி வரிச்சுமை கூட்டுகிறது.





3) **போட்டியின்மை**
- வணிக அனுபவமோ அல்லது வியாபார வெளிப்பார்வையோ இல்லாத அரசு அலுவலர்கள் துறைவாரி நிறுவனங்களை நிர்வாகம் செய்வதனால், அவர்க்ளால் துறைவாரி நிறுமங்களை முறையாகக் கடடுப்படுத்த முடியவில்லை.
- ஆகவே நுகர்வோரின் விருப்பத்தையோ அல்லது தேவையையோ அறிந்து கொள்ளாமல் தங்கள்அது குறுகிய அனுபவத்தின் மூலம் வழிநடத்துகின்றனர்.
- இதனால் இநநிறுமங்களின் செயல்திறன் குறைகிறது.

4) **பணியில் சராசரி அணுகுமுறை**
- அரசு அலுவலர்கள் தங்களது பணியில் சராசரி அணுகுமுறை போன்றே இந்நிறுவன பணியிலும் ஈடுபடுகிறார்கள்.
- அதனால் நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகிற திறமை இல்லாமல் போகிறது.

5) **அரசின் தலையீடு**
- துறைவாரி நிறுவனங்களின் மீது அளவுக்கதிகமான கட்டுபாடு, விதிகள் ஆகியவற்றை அரசு சுமத்துகிறது.
- இது துறைவாரி நிறுவனங்கள் தன்னாட்சியுடன் பணியாற்ற விடுவதில்லை.

6) **மேலாண்மைத் திறமைக் குறைவு என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகும் அச்சம்**
- துறைவாரி நிறுவனங்களின் மேலாளர்கள அரசு அலுவலர்க்ளாக இருப்பதால் அவர்களின் மெத்தனப்னபோக்கு அவர்களைச் சிறப்பாகச் செயல்பட அனுமதிப்பதில்லை.

7) **நிதிச்சார்பு**

துரைவாரி நிறுவனங்கள் பொளாதார ரீதியாகவும் மற்றும் அரசின் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டைச் சார்ந்தும் இருக்க வேண்டியுள்ளது.
எனவே பொருளாதார ரீதியாக இந்நிறுவனங்கள் தன்னிச்சையாக செயல்பட முடிவதில்லை.

( அல்லது )

43 ஆ) மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் ஏதேனும் ஐந்தினை எழுதுக.

| வ.எண் | தலைப்பு | மொத்த வியாபாரி | சில்லறை வியாபாரி |
|---|---|---|---|
| 1 | இணைப்புச் சங்கிலி | இவர் உற்பத்தியாளரையும் சில்லறை வியாபாரியையும் இணைக்கிறார். வழங்கல் வழியில் மொத்தவியாபாரி முதல் இணைப்புச் சங்கிலி ஆவார் | சில்லறை வியாபாரி மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கிறார். வழங்கல் வழியில் சில்லறை வியாபாரி இறுதி இணைப்புச் சங்கிலி ஆவார் |
| 2 | செயல்பாட்டு அளவு | மொத்தவியாபாரம் பெருமளவில் நடப்பதால் தொழிலுக்கு மிகப்பெரும் அளவு முதல் தேவைப்படுகிறது | சில்லறை வியாபாரம் சிறு அளவில் மட்டுமே நடப்பதால் சிறிய அளவு முதல் தொகையே போதுமானது |
| 3 | கிடைக்கும் பொருள்கள் | இவர் ஒரே வகையான பொருட்களை மட்டுமே வாங்கி விற்கிறார் | இவர் பலவிதமான பொருட்களை வாங்கி விற்பார் |
| 4 | செயல்பாடு | இவர் சில்லறை வியாபாரிகளுக்குக் கடன் விற்பனை செய்கிறார் | இவர் நுகர்வோருக்கு ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை செய்கிறார் |



Padasalai

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

| 5 | விற்பனையின் நோக்கம் | இவர் மறுவிற்பனைக்காகப் பொருட்களை விற்பனை செய்கிறார் | இவர் நுகர்வுக்காகப் பொருட்களை விற்பனை செய்கிறார் |
|---|---|---|---|
| 6 | அளிப்பின் மூலம் | மொத்தவியாபாரிகள் பொருட்களை முகவர் அல்லது மொத்தவியாபாரியிடம் அதிக எண்ணிக்கையில் பொருள்களை வாங்குகின்றனர் | சில்லறை வியாபாரிகள் மொத்தவியாபாரிகள் அல்லது அவரது முகவரிடம் சிறு எண்ணிக்கையில் பொருட்களை வாங்குகின்றனர் |
| 7 | இடவமைப்பு | இவர் தனது வியாபாரத்தைப் பெரிய வணிக நகரங்களில் நிறுவி அதைச் சுற்றியுள்ள மற்றப் பகுதிகளுக்கும் பரவச் செய்கிறார் | இவர் சிறு கிராமம் முதல் பெரு நகரங்கள் வரை தனது வணிக நிலையத்தை நிறுவி அக்குறிப்பிட்ட பகுதியில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்கிறார் |

**44. அ) (i) செயல்முறை விதிகள் என்றால் என்ன?**

- செயல்முறை விதிகள் என்பது, நிறுமத்தின் முக்கிய ஆவணமாகும்.
- இதில் உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.
- இந்த முக்கிய ஆவணம் நிறுமத்தைப் பதிவு செய்யும் பொழுது நிறுமம் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.
- நிறுமச்சட்டத்தின் குறிப்பிட்டுள்ளவாறு இந்த ஆவணம் நிறுமம் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதற்கான நிறுமத்தின் துணை விதிகளாகக் கருதப்படும். அட்டவணை'அ' (Table A) நிறுமத்தின் உட்கட்டமைப்பு விதிகளைவெளிப்படுத்தும் ஆவணமாகும்.

**(ii) செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?** (ஏதேனும் 5 )

1) பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள்.
2) ஒவ்வொரு வகை பங்குநர்களின் உரிமைகள்
3) பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.
4) பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்தல் மற்றும் அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.
5) பங்குமாற்றம் குறித்த விதிகள்.
6) பங்காதாயம் அறிவித்தல் .
7) நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம் .
8) இயக்குநர்களின் நியமனம், ஊதியம் மற்றும் நீக்கம்.
9) கூட்டங்களை நடத்துதல், பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்
10) நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்
11) நிறுமத்தின் பொது முத்திரை.
12) நிறுமக் கலைப்புத் தொடர்பான நடைமுறைகள்.

( அல்லது )

B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**44 ஆ) பன்னாட்டு வணிகத்தின் நன்மைகள் எவையேனும் ஐந்தினை விளக்குக.**

நீக்கப்பட்ட பாடப்பகுதி ( 25.08 பன்னாட்டு வணிகத்தின் நன்மைகளும் குறைபாடுகளும் )

**45. அ) வணிக வங்கிகளால் வழங்கப்படும் பல்வேறு வகையான கடன்களைப் பற்றி விவரிக்கவும்.**

1. <u>வங்கி மேல்வரைப் பற்று</u>
   - இந்தக் கடன் வசதி பெரும்பாலும் நடப்புக் கணக்கு வைத்திருக்கும் வணிக வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.
   - இது வங்கி மற்றும் கடன் பெறத் தகுதி வாய்ந்த வாடிக்கையாளர் இருவருக்கும் இடையில் ஏற்படும் உடன்பாடு ஆகும்.
2. <u>ரொக்கக் கடன்</u>
   - இது தொழில் நிறுவனங்கள் வைத்திருப்பவர்களுக்கு வழங்கப்படும் ஒரு வகையான பிணையக் கடன் ஆகும்.
   - சரக்கிருப்பு, மூலப்பொருட்கள், இதர அசையா சொத்துகள் போன்றவற்றை பிணையமாக பெற்று கடன் வழங்கப்படுகிறது.
3. <u>மாற்றுச் சீட்டுகளை தள்ளுபடி செய்தல்.</u>
   - வியாபார வாடிக்கையாளர்கள் வங்கிகளிடம் தொடர்பு கொண்டு, வாணிக மாற்றுச் சீட்டுகளைத் தள்ளுபடி செய்து, பணம் வழங்கிட நாடுகிறார்கள்.
   - இது ஒரு குறுகிய காலக் கடனுக்கான ஆவணம்.
4. <u>வீட்டுக் கடன்</u>
   - கடன் பெறுபவரின் மாத வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு முன்கூட்டியே நடுத்தர மற்றும் நீண்டகால வீட்டுக் கடன்களை வழங்கி ஒப்பந்தத்தின் தொடக்கத்திலேயே வீட்டினைப் பிணையமாக வங்கிகள் எடுத்துக்கொள்கின்றன.
   - வாடிக்கையாளர் சமமானமாதத் தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும்
   - ஒரு வீட்டின் மொத்தத் தவணையில் செலுத்தி வாங்கிட இயலாத நடுத்தர வகுப்பு வருமானமுள்ள பணியாளர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும்.
5. <u>நுகர்வோர் கடன்</u>
   - நுகர்வோர் சாதனங்களான குளிர்சாதனப் பெட்டி, குளிரூட்டும் சாதனம், மடிக்கணினி, துணி துவைக்கும் இயந்திரம், தொலைக்காட்சி போன்ற சாதனங்களை வாடிக்கையாளர்கள் வங்கிகளிலிருந்து நுகர்வோர் கடன்கள் மூலம் வாங்கமுடியும்.
   - வாங்கப்படும் பொருள்கள் நுகர்வோர் கடன் தொகைக்கு அடமானப் பொருளாகக் கருதப்படும்.
   - கடன் தொகையினை வாடிக்கையாளர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சமமானமாதத் தவணைகளில் செலுத்தவேண்டும்.
6. <u>வாகனக் கடன்</u>
   - இரு சக்கர வாகனங்கள், சீருந்துகள், பேருந்துகள் மற்றும் இதர வாகனங்கள் தனிநபர்களாலும், நிறுவனங்களாலும் வங்கிகளில் இருந்து வாகனக் கடன் மூலம் வாங்கமுடியும்.
   - வங்கியிடமிருந்து பெற்ற கடனை முழுமையாகத் திருப்பிச் செலுத்தும் வரை வாகனம் வங்கியின் அடமானத்தில் இருக்கும்.
   - வாகனப் பதிவுப் புத்தகம் வங்கியுடன் வைப்பு செய்யப்பட்டு, கடன் தொகை முழுவதுமாகச் செலுத்தப்பட்ட பின்பு வாடிக்கையாளருக்கு ஒப்படைக்கப்படும்.

B.BALAJI , GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

Padasalai.Net

7. **கல்விக் கடன்**
- ❖ இளங்கலை, முதுகலை அல்லது தொழில்முறை படிப்பு படிக்கும் மாணவர்களுக்குக் கல்விக் கடன் வழங்கப்படுகிறது.
- ❖ கல்விக் கட்டணம் ஒவ்வொரு வருடமும் தவணைகளில் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்தப்படுகிறது.
- ❖ படிப்பினை முடித்தபிறகு ஒரு ஆண்டுக்கு, வேலைவாய்ப்பு பெறமாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.
- ❖ அதன்பிறகு, முழு காலத்திற்கும் கடனுடன் வட்டியைச் சேர்த்து மாணவர்கள் திரும்பச் செலுத்தவேண்டும்.
- ❖ வட்டியானது கடன் தொகையின் முதல் தவணைவழங்கிய தேதியில் இருந்து கணக்கிடப்படும்.

8. **நகைக் கடன்**
- ❖ வாடிக்கையாளர்கள் தங்கள் தங்கநகைகளை அடமானமாக வைத்து வங்கிகளில் இருந்து கடன் பெறலாம். உச்சஅளவு இந்திய ரிசர்வ்வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கும்.
- ❖ வட்டி ஒவ்வொரு மாதமும் செலுத்தப்பட வேண்டும். இல்லையெனில் வட்டிக்கு வட்டி விதிக்கப்படும்.
- ❖ 12 மாதங்களுக்குள் வாடிக்கையாளர் மீட்டெடுக்கமுடியும் அல்லது மீட்டு திரும்பஅடமானம் வைக்கமுடியும்.

9. **அடகு கடன்**
- ❖ கடன்பெறுநர், அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள, தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்து பெறக்கூடிய கடன் அடகு கடன் ஆகும்
- ❖ கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை, அடகு வைக்கப்பட்ட பொருள், கடனாளரிடமே இருக்கும்.

10. **அடமானம் கடன்**
- ❖ அசையா சொத்தினை ஈடாக வைத்து நிதி திரட்டும் முறைக்கு அடமானம் என்று பெயர்.

11. **பந்தக கடன்**
- ❖ பந்தக கடன் என்பது, அசையும் சொத்துக்களின், மூல ஆவணங்களை கடனாளரிடம் அடகு வைத்து பெறப்படும் கடனாகும்.

( அல்லது )

**45ஆ) கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி.**

- i) நிறுவனத்தின்பெயர்
- ii) வணிகத்தின் தலைமையிடம்
- iii) பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம்
- iv) அனைத்துக் கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
- v) ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள் மற்றும்
- vi) கூட்டாண்மையின் காலம்
  - ❖ மேற்காணும் அறிக்கையை தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பம் இட்டு, பதிவாளரிடம் பதிவுக்கட்டணம் ரூ.3 செலுத்தி, சமர்ப்பிக்க வேண்டும்.
  - ❖ மேற்காணும் அறிக்கையில், மாற்றம் செய்ய விரும்பினால், பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்கவேண்டும்.





**46. அ) உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?**

1. ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.
2. உள் நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்.
3. உள்நாட்டு உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் இடைநிலையர்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.
4. உள்நாட்டு வியாபாரம், இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தை உள்ளடக்கியது.
5. இதில் போக்குவரத்து இடர்பாடு, பன்னாட்டு வணிகத்தைவிட குறைவாகவே உள்ளது.
6. இதில் உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்படும்.
7. இதன் நோக்கம், அத்தியாவசியப் பொருட்களை சிக்கனமாக வழங்குவது ஆகும்.
8. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மட்டுமே இடம் பெறும்.
9. ஒரே நாட்டுக்குள் தோற்றுவிக்கப்பட்ட வியாபார அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்து பொருட்கள் வாங்கப்படுகிறது.
10. உள்நாட்டுப் போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது.
11. இதில் சுங்கவரி, இறக்குமதி வரி போன்றவை இடம் பெறுவதில்லை.

( அல்லது )

**46ஆ) எவையேனும் 5 வகையான பண்டகக் காப்பகங்களை விவரி.**

I. **உரிமையின் அடிப்படையில்**

1. **தனியார் பண்டகக் காப்பகங்கள்**
   - ❖ இவ்வகை பண்டகசாலைகள் தனியார் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், அவை உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்படுபவை.
   - ❖ இவை, அவற்றின் சொந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது.
2. **அரசு பண்டகக் காப்பகங்கள்**
   - ❖ அரசின் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக, அரசு இந்த பண்டகக் காப்பாகங்கள் உருவாக்கி நடத்தி வருகிறது.
   - ❖ இதன் சேவைகள்,பெரும்பாலும் அரசு துறைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன.
3. **பொதுப் பண்டகக் காப்பகங்கள்**
   - ❖ இது பெரிய அளவில், பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது.
   - ❖ சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், பெரிய அளவிலான பண்டகக் காப்பாகங்கள் சொந்தமாக அமைக்க முடியாது.
   - ❖ அவர்கள் இம் மாதிரியான பண்டகக் காப்பாகங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்
4. **கூட்டுறவு பண்டகக் காப்பகங்கள்**
   - ❖ இந்த பண்டக காப்பகத்தை ஏற்படுத்தி, நிர்வகிக்கும் பொறுப்பை கூட்டுறவு சங்கங்கள் அல்லது விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்கின்றன.
5. **பிணையகாப்பு பண்டகக் காப்பகங்கள்**
   - ❖ இவ்வகை பண்டகக் காப்பகங்கள், அரசிடம் உரிமம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை சுங்கவரி செலுத்தும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்க பயன்படுகின்றன.
6. **நிறுவனமுறைப் பண்டகக் காப்பகங்கள்**
   - ❖ ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து அந்நிறுவனங்கள் பண்டகக் காப்பாகங்களை வைத்திருக்கின்றன.
7. **விநியோக மையப் பண்டகக் காப்பகங்கள்**
   - ❖ தற்காலிகமாக சரக்குகளை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வைப்பதற்கும் அங்கிருந்து சரக்குகளை பகிர்ந்தளிக்கவும் , இவ்வகை பண்டகக் காப்பாகங்கள் பயன்படுகின்றன.



Padasalai.Net

Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

II. <u>பண்டங்களின் தன்மைகளின் அடிப்படையில்</u>

1. <u>பொதுப் பண்டகக் காப்பகங்கள்</u>
   - இது உலர்ந்த தானியங்கள், உரங்கள், முதலியவற்றை பேரளவில் சேமித்து வைப்பதற்கான ஒரு பயனுள்ள பண்டகக் காப்பாகங்கள் ஆகும்.
2. <u>சிறப்புபொருள் பண்டகக் காப்பகங்கள்</u>
   - புகையிலை, பருத்தி, கம்பளி போன்ற குறிப்பிட்டவகை பொருட்களை பாதுகாப்பதற்காக, இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.
3. <u>குளிர்பதன பண்டகக் காப்பகங்கள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள்</u>
   - பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன. மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டகக் காப்பாகங்களில் சேமிக்கப்படுகின்றன.
   - பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி, போன்ற விரைவில் அழுகக்கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகக் காப்பாகங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
4. <u>தட்பவெப்பநிலை பண்டகக் காப்பகங்கள்</u>
   - தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டில் உள்ள பண்டக காப்பகங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் வளர்சிதை மாற்றத்தை குறைக்க பயன்படுகின்றன.
5. <u>தானியங்கி பண்டகக் காப்பகங்கள்</u>
   - ஒரே நேரத்தில் பல நூறு கிலோ எடையுள்ள சரக்குகளை கையாளக்கூடிய திறன் கொண்டவசதிகள் இங்கு உண்டு.
   - இதற்கு பெரிய முதலீடு, நவீன தொழில்நுட்பம் மற்றும் பெரிய அளவு சுழற்சி உள்ள பொருட்கள், நிறுவனத்தில் இருக்கவேண்டும்.

47. அ) நேரடி வரியையும் மறைமுக வரியையும் வேறுபடுத்துக. ( ஏதேனும் 5 )

| அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| 1.பொருள் | ஒரு நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது | சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது |
| 2. வரி நிலைப்பாடு மற்றும் வரி தாக்கம் | மதிப்பீட்டிற்குரியவர் மீது சுமத்தப்பட்டு வசூலிக்கப்படுகிறது | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு ஆனால் மதிப்பீட்டிற்குரியவரால் செலுத்தப்படுகிறது |
| 3. ஏய்ப்பு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்புகள் உண்டு | வரி ஏய்ப்புக்கான வாய்ப்பு குறைவு |
| 4. பணவீக்கம் | இது, பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது | இது, பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது |
| 5. மாற்றுதல் | மாற்ற முடியாது | மாற்ற முடியும் |
| 6. உதாரணங்கள் | சொத்து வரி, வருமான வரி | சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தி வரி |



47ஆ) பண்டைய தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக.

i) பூம்புகார் போன்ற பெரிய நகரங்கள் மருவூர்ப்பாக்கம் (உள்நாட்டு நகரம்) மற்றும் பட்டினப்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப் பொருள்கள் மற்றும் இதர பொருள்கள் வியாபாரம் செய்யக்கூடிய இடங்களில், அங்காடிகளையும் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.

ii) தொண்டி, கொற்கை, பூம்புகார் மற்றும் முசிறி ஆகிய துறைமுகங்கள் ஒட்டிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் இடங்களாக இருந்தன.

iii) வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தன. முத்துக்கள், பவளங்கள் மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும் கப்பல் கட்டுதலிலும் ஈடுபட்டிருந்தனர்.

iv) குறிப்பாக சிறியதான படகு, திமிலா, தோணி, அம்பு, ஓடம்புனை, கட்டுமரம் முதலியன உள்நாட்டு வியாபாரத்திற்கும், பேரளவுகலம், மரக்கலம், வங்கம், நாவாய் முதலியன வெளிநாட்டு வியாபாரத்திற்கும் பயன்படுத்தினர்.



Padasalai.Net